## பட்டாக்களுக்காகக் காத்திருப்போருக்கு படிப்படியாக விரைவில் பட்டா வழங்க நடவடிக்கை!

# மக்களின் கனவை நிறைவேற்றும் ‘திராவிட மாடல்’ அரசின் குறிக்கோள்!

## சென்னை - மாதவரத்தில் 2,124 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கி, அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

மாதவரம்,ஜூலை 25-

**சென்னை, மாதவரம் சூரப்பட்டில், மாதவரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளைச் சேர்ந்த 2 ஆயிரத்து 124 பயனாளிகளுக்கான வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கும் நிகழ்ச்சி, நேற்று முன்தினம் நடைபெற்றது.**

**இதில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு, வீட்டுமனைப் பட்டாக்களைப் பொதுமக்களுக்கு வழங்கி, வாழ்த்திப் பேசினார். அப்போது அவர், பட்டாவுக்காகக் காத்திருக்கும் பொதுமக்களுக்கும் நம் திராவிட மாடல் அரசில் சார்பில், படிப்படியாக பட்டாக்கள் வழங்கப்படும் என்று குறிப்பிட்டார்.**

**இவ்விழாவில், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:**

சென்னை வருவாய் மாவட்டத்தில் பல்வேறு காரணங்களால், வீட்டு மனைப் பட்டா கிடைக்காமல் காத்திருந்த பொதுமக்களுக்கு உடனடியாக பட்டா வழங்க முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு இருந்தார்கள். அதன் பேரில், சென்னை மாவட்டத்தில் மட்டும் வருவாய்த்துறை சார்பில் 28 ஆயிரத்து 848 பட்டாக்கள் தயார் செய்யப்பட்டன.

இவற்றில், மாதவரம் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதியைச் சேர்ந்த 2 ஆயிரத்து 124 பயனாளிகளுக்கு வீட்டுமனைக்கான பட்டாக்களை வழங்குகிற இந்தச் சிறப்பான நிகழ்ச்சியில் பங்கேற்பதில் நான் மிகுந்த பெருமை அடைகிறேன். மகிழ்ச்சி அடைகிறேன்.

முதலமைச்சர் தலைமையிலான நம் திராவிட மாடல் அரசு உங்களுக்குப் பல்வேறு நலத்திட்டங்களைத் தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கிறது. நம் அரசின் சாதனைகளை முதலமைச்சரின் உழைப்பை அங்கீகரிக்கிற வகையில், சமீபத்தில் நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் `40 க்கு 40’ என்ற நூறு சதவிகித மிகப்பெரிய வெற்றியை தமிழ்நாட்டு மக்களாகிய நீங்கள், நம் இயக்கத்திற்கும், நம் அரசிற்கும் அங்கீகாரமாகக் கொடுத்திருக்கிறீர்கள். அதற்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மக்களுடன் நிற்கும் ‘திராவிட மாடல்’**

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையிலான கழக அரசாக இருந்தாலும், நம் முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசாக இருந்தாலும், ஏழை, எளிய அடித்தட்டு மக்கள், நடுத்தர வர்க்க மக்களின் ஏற்றத்திற்காக தினம், தினம் பல்வேறு நலத் திட்டங்களை வகுத்துக் கொண்டிருக்கிறது. அவற்றை மக்களுக்குக் கொடுத்துக் கொண்டும் இருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகமும், திராவிட மாடல் அரசும் எப்போதும் உங்களுடன் நிற்கிறது. அதேபோல நீங்களும் எப்போதும் கழகத்திற்கும் நம்முடைய தலைவருக்கும், நம் அரசுக்கும் பக்கபலமாக தொடர்ந்து இருந்து கொண்டு வருகிறீர்கள்.

உண்ண உணவு, உடுத்த உடை, இருக்க இடம் என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் அடிப்படை உரிமை என்று ஐ.நா மன்றம் சொல்லி இருக்கிறது. கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்திலிருந்தே உண்ண உணவு, உடுத்த உடை, இருக்க இடம் என்ற அடிப்படைத் தேவைகளைப் பார்த்துப் பார்த்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, வீடு என்பது எல்லோருக்குமான ஓர் அத்தியாவசியத் தேவை. அது ஒரு கனவு. அதற்காகத்தான் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1970ஆம் ஆண்டுகளிலேயே இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தைத் தொடங்கி வைத்தார்கள். இன்றைக்கு நம் முதலமைச்சர் அவர்கள் `தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம்’ என்று அதை மேம்படுத்தி இருக்கிறார்கள்.

அதுமட்டுமில்லாமல், `எல்லோருக்கும் வீடு கிடைக்க வேண்டும்’ என்ற அடிப்படையில் `கலைஞர் கனவு இல்லம்’ என்ற ஒரு திட்டத்தையும் நம் முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு தொடங்கி வைத்திருக்கிறார்கள்.

**மாநிலத்தில் முதன்முறையாக**

தமிழ்நாட்டிலேயே முதல்முறையாக கட்டட அனுமதியை ஆன்லைன் மூலமாக உடனடியாகப் பெற வேண்டும் என்ற திட்டத்தையும் நேற்று முன்தினம் நம் முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்திருக்கிறார்கள். வீடு எவ்வளவு முக்கியமோ அதே அளவு அந்த வீட்டிற்கான பட்டாவும் மிக மிக முக்கியம். அந்த வகையில் பார்த்தால், உங்கள் ஒவ்வொருவருக்கும் இந்த நாள் மிக மிக மகிழ்ச்சியான, முக்கியமான ஒரு நாள்.

ஏனென்றால், பட்டா வேண்டும் என்ற பலரின் பல வருடக் கனவு இன்று நனவாகி இருக்கிறது. குறிப்பாக, சென்னையில் தேர்தல் பிரச்சாரத்தில் நான் ஈடுபட்டபோது, முதலமைச்சரின் அறிவுரைப்படி, உங்களுக்கெல்லாம் ஒரு வாக்குறுதி அளித்திருந்தேன். ‘சென்னையில், பட்டா பிரச்சினை பல வருடமாக இருக்கிறது. அப்படி பட்டா கிடைக்காமல் இருப்பவர்களுக்கு, நிச்சயம் தேர்தல் முடிந்தவுடன் நம் ஆட்சியில் பட்டா வழங்கப்படும், அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்’ என்ற வாக்குறுதியை நான் அளித்திருந்தேன்.



நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் வந்து இரண்டு மாதங்கள்தான் ஆகி இருக்கின்றன. இந்த இரண்டு மாதத்திற்குள் முதலமைச்சர் அவர்கள் உங்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றி இருக்கிறார். நம் திராவிட மாடல் அரசால், பல வருடங்களாக பட்டா இல்லாமல் இருந்தவர்களுக்கு இன்று பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், சி.எம்.டி.ஏ என வரைமுறை செய்யப்பட்ட திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பட்டாக்களுக்கு கணினி பட்டா கொடுப்பது, நத்தம் செட்டில்மென்ட், டவுன் செட்டில்மென்ட், 2018ஆம் ஆண்டிற்குப் பிறகு, சென்னை வருவாய் மாவட்டத்துடன் இணைந்த பகுதிகளில் உள்ள வீட்டு மனைகளுக்குப் பட்டா கொடுப்பது, சர்க்கார் நஞ்சை, புஞ்சை என ஏகப்பட்ட பிரச்சினைகள் இருந்து வந்தன.

ஆனால், இந்தப் பிரச்சினைகள் எல்லாம் முதலமைச்சரின் கவனத்திற்கு எடுத்துச் சொல்லப்பட்டபோது, `எத்தனை சிக்கல்கள் இருந்தாலும் சரி, மக்களின் மகிழ்ச்சிதான் முக்கியம்’ என்று ஒரே குறிக்கோளுடன் முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கெல்லாம் அறிவுறுத்தி இருந்தார்கள். ஏனென்றால், உங்களுக்கு ஒரு வீட்டிற்கான பட்டா என்பது உங்கள் ஒவ்வொருவரின் உரிமை. அதனால்தான், இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்குப் பரிந்துரைகளை வழங்க ஒரு குழுவை நம் முதலமைச்சர் அவர்கள் நியமித்தார்கள்.

உடனே, எந்தப் பகுதியில் என்ன பிரச்சினை இருக்கிறது. அதை எப்படித் தீர்க்க வேண்டும் என்ற பரிந்துரையைத் தயார் செய்து சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்கள், மாவட்ட ஆட்சியர்களுக்கு அந்தக் குழு அளித்தது. அதன் காரணமாக, இன்று 28 ஆயிரத்து 848 பயனாளிகளுக்கு வழங்குவதற்குப் பட்டாக்கள் தயாராக உள்ளன.

குறிப்பாக, இன்றைக்கு இந்த மாதவரம் மற்றும் மாதவரம் தொகுதியைச் சேர்ந்தவர்களுக்கு 2 ஆயிரத்து 124 பட்டாக்களும், நாளை சோழிங்கநல்லூரில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் ஆயிரத்து 984 பட்டாக்களும் வழங்க இருக்கிறோம். அதில் ஒரு பகுதியாகத்தான் இன்றைக்கு இந்த நிகழ்ச்சி இவ்வளவு சிறப்பாக மகிழ்ச்சியுடன் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இதைத் தொடர்ந்து, சென்னையில் உள்ள சட்டமன்றத் தொகுதிகளில் அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்கள் மூலமாகப் பட்டாக்கள் வழங்கப்பட இருக்கின்றன. நம் திராவிட மாடல் அரசின் முயற்சிகளால் இன்றைக்கு உங்கள் ஒவ்வொருவரின் கைகளிலும் வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கிறது.

**13 துறைகளில் ‘நம்பர் 1’**

நம் திராவிட மாடல் அரசு இன்று இருக்கிற மக்களுக்கு மட்டுமில்லாமல், தமிழ்நாட்டின் எதிர்கால சந்ததியினருக்கும் சேர்த்துச் சிந்திக்கிறது என்று நம் முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்வார்கள். அதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டுதான், இன்று நடைபெறுகிற இந்த நிகழ்ச்சி. இவ்வளவு நாள் சொந்த வீடாக இருந்தாலும், பட்டா இல்லையே என்ற ஒரு தயக்கமும் கலக்கமும் இருந்திருக்கும். இனி, அந்தப் பிரச்சினை உங்களுக்கு எதுவும் கிடையாது.

உங்கள் வீட்டில் இனி, நீங்கள் நிம்மதியாக மகிழ்ச்சியாகத் தூங்கலாம். ஏனென்றால், இன்றிலிருந்து உங்கள் வீட்டுமனை, வீடு சட்டப்பூர்வமாக உங்களுக்குச் சொந்தமாகி இருக்கிறது. நம் திராவிட மாடல் அரசு இன்றைக்கு இது மட்டுமல்லாமல் எண்ணற்றத் திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்து எனும் ‘விடியல் பயணம்’ திட்டம் மூலமாக, கிட்டத்தட்ட 500 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டு இருக்கிறார்கள்.

மகளிர் சுமையைக் குறைக்கிற வகையில், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை நம் முதலமைச்சர் அவர்கள் அறிமுகம் செய்தார்கள். இந்தத் திட்டத்தை, இன்றைக்குப் பல மாநிலங்கள், வெளிமாநிலங்கள் மட்டுமில்லாமல் கனடா, இலங்கை போன்ற வெளிநாடுகளும் நம் திராவிட மாடல் அரசு திட்டத்தைப் பின்பற்றி வருகின்றன. இதன் மூலமாக இன்று கிட்டத்தட்ட ஒவ்வொரு நாளும், 20 லட்சம் மாணவர்களுக்குப் பள்ளிகளிலேயே முதலமைச்சர் காலை உணவுத் திட்டம் வழங்கப்படுகிறது.

அதேபோல் புதுமைப்பெண் திட்டத்தின் மூலமாக அரசுப் பள்ளிகளில் படித்து உயர்கல்வி படிக்கிற 3 லட்சத்து 25 ஆயிரம் மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கல்வி ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. இவை எல்லாவற்றை விடவும் மிகமிக முக்கியமான திட்டம், `கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம்’. இந்தத் திட்டம் பெண்கள் மத்தியில் மிகப்பெரிய வரவேற்பைப் பெற்று இருக்கிறது.

ஒவ்வொரு மாதமும் கிட்டத்தட்ட ஒரு கோடியே 16 லட்சம் மகளிர் கடந்த 11 மாதங்களாக மாதம் ஆயிரம் ரூபாய் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் மூலம் பெற்று, பயனடைந்து வருகிறார்கள். இப்படி நம் அரசு தமிழ்நாட்டையும், தமிழ்நாட்டு மக்களையும், மக்களின் வளர்ச்சியையும் அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்கின்ற வகையில், அனைத்துச் செயல் திட்டங்களையும் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.

**சாதனைகளில் ஒன்றாக வீட்டுமனைப் பட்டா**

இந்தத் திட்டங்களை நமது முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்துகிற காரணத்தினால், தமிழ்நாடு அரசு இன்றைக்கு வறுமை ஒழிப்பு, மகளிர் முன்னேற்றம், தரமான கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட 13 துறைகளில் இந்தியாவிலேயே ‘நம்பர் ஒன்’ இடத்துக்கு நம் தமிழ்நாடு வந்திருக்கிறது. இதை நான் சொல்லவில்லை, ஒன்றிய அரசின் `நிதி ஆயோக் அமைப்பு’ புள்ளிவிவரத்துடன் சொல்லி இருக்கிறது.

நம் திராவிட மாடல் அரசின் சாதனைகளில் ஒன்றாகத்தான் உங்களுக்கெல்லாம் இன்று வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. நீங்கள் அனைவரும் கழக அரசின் திட்டங்களின் பயனாளிகள் மட்டுமல்ல, நீங்கள் அனைவரும் இந்தத் திட்டங்களின் பங்கேற்பாளர்கள். திராவிட மாடல் அரசின் சாதனைத் திட்டங்களையெல்லாம் நீங்கள், அனைவருக்கும் எடுத்துச் செல்ல வேண்டும். இந்த அரசின் ‘பிராண்ட் அம்பாசிடர்’களாக நீங்கள் திகழ வேண்டும். உங்களுக்காக இந்த திராவிட மாடல் அரசு தொடர்ந்து உங்களுக்கும் உங்களின் அடுத்தடுத்த தலைமுறைகளுக்கும் உழைக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். எங்களை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

இந்தப் பட்டாக்களைத் தயார் செய்ய இரவு பகல் பார்க்காமல் உழைத்துக் கொண்டிருக்கக்கூடிய அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையின் செயலாளர் தாரேஸ் அகமது ஐ.ஏ.எஸ்., பட்டா வழங்குவதில் உள்ள சிக்கல்களைத் தீர்ப்பதற்காக அமைக்கப்பட்ட குழு மற்றும் அந்தக் குழுவின் சிறப்பு அதிகாரி மதுசூதனன் ஐ.ஏ.எஸ், சென்னை மாவட்ட ஆட்சியர் மற்றும் அதிகாரிகள் அலுவலர்கள் அனைவருக்கும் என் நன்றியையும் பாராட்டுக்களையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வீட்டுமனைப் பட்டா பெற்ற அத்தனை பேருக்கும் மீண்டும் என்னுடைய அன்பையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், சு.முத்துசாமி, மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, தா.மோ.அன்பரசன், மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் மாதவரம் சுதர்சனம், ஆர்.டி.சேகர், தாயகம் கவி, காரம்பாக்கம் கணபதி, மயிலை த.வேலு, ஜோசப் சாமுவேல், மருத்துவர் எழிலன், ஐட்ரீம் மூர்த்தி, வெற்றிஅழகன், எபினேசர், பிரபாகர்ராஜா, கே.பி.பி.சங்கர், வீட்டு வசதித் துறை முதன்மைச் செயலாளர் காகர்லா உஷா, மாநகராட்சி ஆணையர் குமரகுருபரன், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் செயலாளர் மருத்துவர் தாரேஸ் அகமது, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் நிர்வாக இயக்குநர் பிரபாகர், வீட்டு வசதிவாரிய நிர்வாக இயக்குநர் சமீரன், நில நிர்வாக ஆணையர் கே.எஸ்.பழனிச்சாமி, நில அளவை ஆணையர் மதுசூதனன் ரெட்டி, சென்னை மாவட்ட ஆட்சியர் ராஷ்மி சித்தார்த், மாவட்ட வருவாய் அலுவலர் அனுசியாதேவி, சென்னை மாநகர துணை மேயர் மகேஷ்குமார், வீட்டு வசதி வாரியத்தலைவர் பூச்சி முருகன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் முதன்மைச் செயலாளர் அமுதா ஐ.ஏ.எஸ்., மற்றும் அரசு அதிகாரிகள் அரசு அலுவலர்கள் உட்பட ஏராளமான பயனாளிகள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.



சென்னை மாதவரம், சூரப்பட்டு வேலம்மாள் பொறியியல் கல்லூரி வளாகத்தில், நேற்று முன்தினம் (23.07.2024) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் வருவாய்த் துறை மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம், மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அரசு செயலாளர் மருத்துவர் தாரேஸ் அகமது, நில நிர்வாக ஆணையர் டாக்டர் கே.எஸ்.பழனிசாமி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, நிலஅளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநர் பி. மதுசூதன் ரெட்டி, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கீ.சு.சமீரன், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ்.முருகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

> **“நம் ‘திராவிட மாடல்’ அரசு இன்று இருக்கிற மக்களுக்கு மட்டுமில்லாமல், தமிழ்நாட்டின் எதிர்கால சந்ததியினருக்கும் சேர்த்துச் சிந்திக்கிறது என்று நம் முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்வார்கள். அதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டுதான், இன்று நடைபெறுகிற இந்த நிகழ்ச்சி. இவ்வளவு நாள் சொந்த வீடாக இருந்தாலும், பட்டா இல்லையே என்ற ஒரு தயக்கமும் கலக்கமும் இருந்திருக்கும். இனி, அந்தப் பிரச்சினை உங்களுக்கு எதுவும் கிடையாது.”**